பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 07 புதன்கிழமை (23.10.1996) UTHAYAN A Liveyl Nationel Tamil Daily கதிர் 249

# நாவற்குழியில் காணாமல் போன நான்கு பேரும் சடலங்களாக மீட்பு!

## கைதான சில இராணுவத்தினர் புதைகுழிகளை இடம் காட்டினராம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 23

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் ஆறு வாரங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் காணாமற்போன சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி கிருஷாந்தியும், அடுத்த நாள் காணாமற்போன அவரது தாயார், தம்பியார், அயல் வீட்டுக்காரர் ஆகிய நால்வரும் நேற்று செம்மணிப் பகுதியில், செம்மணி வீதியோரத்தில் புதைகுழிகளிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சில இராணுவத்தினர் அடையாளம் காட்டிய இடங்களில் நிலத்தைத் தோண்டிய போது சடலங்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

செல்வி குமாரசாமி கிருஷாந்தி (வயது 18) யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பு விஞ்ஞான பிரிவில் கல்வி பயின்றவர். கடந்த ஒகஸ்ட் முற்பகுதியில் நடைபெற்ற ஜி.சி.ஈ. (உயர்தர) வகுப்புப் பரீட்சைக்குத் தோற்றிக் கொண்டிருந்தவர். கடந்த ஒகஸ்ட் 7 ஆம் திகதி இராணுவ வாகனத்துடன் இடம் பெற்ற விபத்து ஒன்றில் உயிரிழந்த தனது சகமாணவி ஒருவரின் மரண வீட்டுக்குச் சென்று விட்டு, கைதடியில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாணம்—நாவற்குழி எல்லைப் பகுதியில் இவர் மர்மமான முறையில் காணாமற் போனதாகக் கூறப்பட்டது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## புதை குழியில் கிடந்த சடலங்களில் கழுத்தில் கயிற்றினால் சுருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 23

காணாமற் போன யுவதி கிருஷாந்தியும் மற்றும் மூவரும் கழுத்தில் கயிற்றால் சுருக்கிட்டு உயிரிழந்த நிலையில்— உருக்குலைந்த சடலங்களாக — மூன்று புதைகுழிகளிலிருந்து நேற்று பிற்பகலில் மீட்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட நீதிபதி நமசிவாயம் அருள்சாகரன் முன்னிலையில் ஆஸ்பத்திரி ஊழியர்கள் மூவர் புதைகுழிகளை வெட்டிச் சடலங்களை வெளியே எடுத்தனர்.

செம்மணி வீதியில் வீதிக்கு சில யார் தொலைவில் இரு புதைகுழிகளில் பெண்கள் இருவரதும் சடலங்கள் உருக்குலைந்து கிடந்தன. கிருஷாந்தியின் சடலம் மிகமோசமாக சேதமுற்றிருந்தது. அவரது உடையில் இரத்தக் கறைகள் காணப்பட்டன.

மற்றைய ஆண்கள் இருவரினதும் சடலங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக உடைகளற்ற நிர்வாண நிலையில் — செம்மணி வீதியிலிருந்து சுமார் ஐம்பது யார் தூரத்தில்— பற்றை மறைவில் புதைக்கப்பட்டுக் கிடந்தன.

காணாமற் போனவேளை அவர்கள் அணிந்திருந்த தாகக் கூறப்படும் உடைகள் வேறு ஒரு புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டன. இந்த நால்வரும் அணிந்திருந்த செருப்புகளும் மீட்டெடுக்கப்பட்டன.

நால்வரும் அணிந்திருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பொலனறுவையில் 16 பொலீஸார் பலி!

கொழும்பு ஒக். 23

பொலன்னறுவை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய தாக்குதல் ஒன்றில் 16 பொலீஸார் கொல்லப்பட்டனர். 6 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவர் ஊர்காவற் படையினர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இதனைத் தெரிவித்தது.

பொலன்னறுவை மாவட்டம் மெதிரிகிரியாவில் இருந்து 14 கிலோ மீற்றர் கிழக்கே உள்ள பொலீஸ் காவல் நிலையமே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

காயமடைந்த பொலீஸார் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அருகில் உள்ள [illegible] காவல் நிலையத்[illegible] மேலதிக பொலீஸார் அந்த இடத்துக்கு விரைந்து வந்து இராணுவத்துடன் சேர்ந்து பதில் தாக்குதல் நடத்தியதாகவும் —

இந்த பதில் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

[illegible] உறுப்பினர்களே [illegible] இத்தாக்குதலில் பெருமளவில் பங்கு பற்றினர் என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தீவிர விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 23

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தியும் அவரைத் தேடிச் சென்ற அவரது தாய், தம்பியார் மற்றும் அயலவர் ஆகியோரும் காணாமற் போனது குறித்து தீவிர விசாரணை நடத்தி, உண்மையைக் கண்டறியும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க படை அதிகாரிகளுக்கு கடும் உத்தரவிட்டிருந்தார்.

இராணுவ உயர் வட்டாரங்களில் இருந்து இத்தகவல் தெரியவந்தது.

மேற்படி நான்கு பேரும் மர்மமான முறையில் காணாமற் போனது குறித்து, மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையிடம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தது தெரிந்ததே.

(உ-3)

## பேச்சுவார்த்தைகளில் புலிகளும் சேரவேண்டும்

### 23 எம். பிக்கள் அறிக்கை

கொழும்பு, ஒக். 23

அரசியல் தீர்வுக்காக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

வட அயர்லாந்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட 23 இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய சமாதான சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாநாட்டை இலங்கை தேசிய சமாதான சபையுடன் இணைந்து லண்டனில் உள்ள ''இன்ரர் நஷனல் அலேட்'' ஒழுங்கு செய்திருந்தது.

மேற்படி மாநாடு வட அயர்லாந்தில் உள்ள கஞமேனா என்ற இடத்தில் கடந்த 20 ஆம் திகதி முடிவுற்றது.

இலங்கையின் நிலைமை குறித்து இம் மாநாட்டில் விரிவாக ஆராய்ந்த 23 எம். பிக்களும் கீழ்க்காணும் விடயங்களில் இணக்கம் கண்டனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் குண்டு வெடிப்பு முஸ்லிம்கள் காயம்

கொழும்பு, ஒக். 23

புத்தளம் மாரியம்மன் கோயிலுக்கு சமீபமாகவுள்ள கால்வாயில் குண்டு ஒன்று நேற்று முன்தினம் இரவு வெடித்ததில் சில முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கோயில்வருடாந்த உற்சவத்தையொட்டிய வேல் பவனி இடம்பெற்ற சிலமணி நேரத்தில் இக்குண்டு வெடித்ததாகவும்—

இக்குண்டு உள்ளூர்குண்டா? என்பது குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## வவுனியா வருவதற்கான கட்டுப்பாடுகள் நீக்கம்

கொழும்பு, ஒக். 23

வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு தமிழ் மக்கள் வருவதற்கு இருந்த தடைகளை நீக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதாக ரோய்ட்டர் தெரிவித்தது.

தமிழகத்துக்கு அகதிகளாக தமிழர்கள் செல்வதைத் தடுக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் ரோய்ட்டர் தெரிவித்தது.

இந்தத் தடை நீக்கப்பட்டதையடுத்து ஆயிரம் தமிழர்கள் வவுனியா வந்துள்ளதாகவும் அது தெரிவித்தது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி அ. மார்க்கண்டு

எமது சக ஊழியர் திரு மா. பாலசிங்கம் அவர்களின் தாயார் திருமதி அ. மார்க்கண்டு அவர்கள் 19 - 10 - 96 இல் சிவபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முகாமையாளரும், சக ஊழியர்களும்

மக்கள் வங்கி,
ஊர்காவற்றுறைக் கிளை. (43313)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 12—10—1913

உதிர்வு: 24—09—1996

அமரர்

### சின்னத்தம்பி கந்தையா

(தம்பிஐயா)

(ஆயுள் வேத வைத்தியர்)

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், சகல உதவிகளைச் செய்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (24 - 10 - 96) வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி: (43306)

---

## 61 St. BIRTHDAY

23—10—1996



Born: 23 — 10 — 1935

Rest in Peace 28 — 06 — 1996

### SWAMINATHAN BALACHANDRAN

"If for Christ I proclaim the glad story,
If I seek for HIS sheep gone astray;
I am sure HE will show me HIS glory,
when I've walked the last mile of my way".

Fondly remembered and sadly missed on his 61 st Birthday by his dearest Wife.

GRACE, SELVA, VIMALA, EDWARD, FRANK, THEVASHANTHI & SUHANTHI.

32, Palam Road,
Kandermadam. (43301)

---

## சமய சந்திகளில்

கோப்பாய் நாவலடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கேதாரகௌரி விழா கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது நவம்பர் பத்தாம் திகதி வரை இவ்விழா நடைபெறும். (அ)

★ ★ ★

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி நரசிம்ம ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை நடைபெறும்.

நாடு நலம் பெறவும் மக்கள் மன நிம்மதியுடன் வாழவும் இறை ஆசி வேண்டி நாளை காலை முதல் மாலை வரை பிரார்த்தனை, பஜனை நடைபெறும். (அ 30

★ ★ ★

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் நவம்பர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9. 22 முதல் 10. 28 வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.

அதனை முன்னிட்டு இன்று புதன்கிழமை காலை 8. 30 மணிக்கு பாலஸ்தாபனம் நடைபெறும் (ஆ-4)

## பெல்ஜியத்தில் பேரணி

பிரேசெல்ஸ் ஒக். 22

சுமார் 3 முதல் 4 லட்சம் பெல்ஜிய மக்கள் பிரேசெல்ஸில் பேரணியொன்றை நடத்தினர்.

சென்ற ஓகஸ்ட் மாதம் சிறுமிகளைக் கடத்திச்சென்று கற்பழித்து கொலை செய்த குற்றவாளிகளை பெல்ஜிய நாட்டு நீதித்துறை இதுவரை விசாரித்துத் தண்டிக்கவில்லை. இதனை ஆட்சேபித்தே கடத்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றாரும் உறவினர்களும் இந்தப் பேரணியை நடத்தினர். (இ-ரி)

## வீடுகளில் வைத்து கள் விற்கத்தடை

யாழ்ப்பாணம், ஒக். 23

அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சங்கக் கிளைகள் தற்போது சீராக இயங்கி வருவதனால் சகல அங்கத்தவர்களும் தாம் உற்பத்தி செய்யும் கள்ளை கிளை நிலையங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் — சட்டவிரோதமான வகையில் கள் விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேற்படி சங்கத்தின் பதில் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (இ-4)

---

உயர் தொழிநுட்பக்கல்வி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

## டிப்புளோமா
### மாலைநேர வகுப்பு ஆரம்பம்

மேற்படி நிறுவனத்தின் உயர் தேசிய கணக்கியல் டிப்புளோமா **2** ஆம் ஆண்டு, **3** ஆம் ஆண்டு, **4** ஆம் ஆண்டு பயிற்சி நெறிகளுக்கான விரிவுரைகள் 26 - 10 - 96 சனிக்கிழமை காலை தொடக்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி, சைவவித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும். மாணவர்கள் அனுமதி அட்டையுடன் சமுகம் தரவும்.

ஒருங்கிணைப்பாளர்.

உயர் தொழிநுட்பக்கல்வி நிறுவனம்,
சைவவித்தியா விருத்திச்சங்கக் கட்டடம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
1996-10-22 (சி/3327)

---

சுன்னாகம்

## பல. நோ. கூ. சங்கம் (வ-து)

சுன்னாகம்

### பொதுமுகாமையாளர் பதவி
### கு. இல. 101 : 06

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி, 12 - 08 - 96 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட வயதுக் கட்டுப்பாடு தற்பொழுது கூட்டுறவுச் சேவையில் இருக்கும் பணியாளர்களுக்குப் பொருந்தாது என்பதை தெரிவிப்பதோடு, விண்ணப்ப திகதி 06-11-96 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்.

தலைவர்.

21 - 10 - 96 (சி/ 3332)

---

## நூலக வாரம்

புலோலி நூலகத்தில் இன்று 23 - 10 - 96 தொடக்கம் 30 - 10 - 96 வரை நூலக வாரம் நடைபெறுகிறது.

சுவாமி விவேகானந்தரின் யாழ் விஜய நூற்றாண்டு முன்னோடி நிகழ்ச்சித் தொடரில் ஒரு நிகழ்வாக, புலோலி பிரதேச சபையும் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமமும் இணைந்து நடத்துகின்றன.

நூலக வார முடிவில் வாசகர்கள் தாம் வாசித்த நூல்களை விமர்சித்து சேவாச்சிரமம் நடத்தும் போட்டியில் கலந்து கொண்டு பரிசில்கள் பெறலாம்.

நூலக வார
அமைப்பாளர்கள்.

(சி/ 3325)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

மீண்டும் யாழ். நகரில்

ஆசிரியர்: திரு. பாலவாசன்

**97 - கம்பனி** (2-00 மணி)

**98 - கணக்கிணக்கக் கூற்று** (1-00 மணி)

ஆரம்பம்: **26 - 10 - 1996**

**96 - DAY CLASS** (11-00 மணி)

ஆரம்பம்: **28 - 10 - 1996**

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(43304)

---

## உடனடி கலர் புகைப்பட சேவை

**(INSTANT COLOUR PHOTOGRAPHY SERVICE)**

உங்களுக்குத் தேவையான விசேட அடையாள அட்டைப் படங்களையும், கடவுச்சீட்டுப் படங்களையும் (Pass Port) கலர்ப்படங்களாக 2 நிமிடத்தில் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளுங்கள்:

# "திரு வீடியோ விஷன்"

&

## கலர் புகைப்படப் பிடிப்பாளர்

★ ஆட்பதிவுத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: திரு வீடியோ விஷன் & கலர்ப்படப் பிடிப்பாளர்,
முத்துவிநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கு கரவெட்டி.

(நல்லூர் பிரிவிலும், ... எம்முடன் தொடர்புகொள்ளலாம்)

(43308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இலா நூலகம்

# இந்தோனேஷிய தொழில் அதிபர் பில் கிளின்ரனுக்கு தேர்தல் நிதி

வாஷிங்டன் ஒக் 23

அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் தேர்தல் நிதி வழங்கிய விவகாரம் ஒன்று தற்போது சூடு பிடித்து வருகிறது.

இந்தோனேஷிய நாட்டைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபர் ஒருவர் கிளின்ரனுக்குப் பெருந் தொகையான பணத்தைத் தேர்தல் நிதியாக வழங்கியுள்ளதாக குடியரசுக் கட்சி வேட்பாளர் பொப்டோல் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை அடுத்து ஆசிய நாட்டுப் பெரும் புள்ளிகள் அமெரிக்க நாட்டுத் தேர்தலில் புகுந்து விட்டனர் என்ற எதிர்ப் புணர்ச்சி அமெரிக்கர்கள் மத்தியில் உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது. (இ-10)

# றுவாண்டா நாட்டின் பெண் அமைப்புக்கு விருது

நியூயோர்க் ஒக். 23

றுவாண்டா நாட்டுப் பெண்கள் அமைப்பு ஒன்றுக்கு யுனெஸ்கோ நிறுவனம் விருது ஒன்றை அளித்துள்ளது.

இனக்கலவரங்களும், வன்முறைகளும் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளாகி விட்ட றுவாண்டாவில் சகிப்புத் தன்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் சமாதானத்துக்கான அடிமட்ட மக்கள் சேவையில் இப்பெண்கள் அமைப்பு ஈடுபட்டுவருகிறது.

சுமார் 32 கிளைகளைக் கொண்ட இந்த அமைப்பை விருது பெறுவதற்குத் தேர்ந்தெடுத்தவர் நோபல் பரிசு பெற்ற தென் ஆபிரிக்க ஆயர் டெஸ்மன் டுட்டு ஆவார். (இ10)

# மத்திய அரசை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரிக்குமா?

## விரைவில் மறுபரிசீலனை

புதுடில்லி, ஒக். 23

இந்தியாவில் மத்தியில் அமைந்துள்ள தேவகௌடாவின் தலைமையிலான 9 கட்சிகள் கூட்டரசாங்கத்துக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவது பற்றி பரிசீலிப்பதற்காக காங்கிரஸ் கட்சி விரைவில் கூடவுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் கடும் போக்குடைய பாரதீய ஜனதாக் கட்சி அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்கும் முகமாக காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரை ஆதரிக்குமாறு விடுத்த வேண்டுகோளை ஐக்கிய முன்னணி நிராகரித்ததால் மத்தியில் தொடர்ந்தும் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவது குறித்து மறுபரிசீலனை செய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது என காங்கிரஸ் பேச்சாளர் வி. என். ஹங்கில தெரிவித்தார்.

எந்தக் கட்சியும் ஆட்சியை அமைக்க முடியாத நிலையில் உத்தரப் பிரதேசத்தில் தற்போது ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-10)

# நகரத்தில் வாழ விரும்பாத மக்கள்

பிரேசிலா, ஒக் 23

வீதிகளில் வாகனங்களின் நெருக்கடி, கொலை, கொள்ளைக் குற்றங்கள், வன்முறைகள், சூழல்கேடு ஆகியவை நிரம்பி வழியும் பிறேசில் நாட்டின் பெரியநகரமான சாவோ பவலோவிலிருந்து வெளியேறி ஊர்ப்புறங்களில் அமைதியான வாழ்க்கை வாழ 63 சதவீதமான மக்கள் விரும்புவதாக மக்கள் கணிப்புக்குழு ஒன்று அறிக்கை வெளியிட்டுள்ளது. (இ-10)

# வன்முறைச் சம்பவங்கள் காஷ்மீரில் நீடிக்கின்றன

**உலக அரங்கில்**

ஸ்ரீநகர், ஒக். 23

காஷ்மீரில் அனந்தனார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த 7பேர் கொல்லப்பட்டனர்.

முன்னதாக நேற்று முன் தினம் அம்மாநிலத்தில் 10 தீவிரவாதிகள் உட்பட 17பேர் கொல்லப்பட்டனர்.

அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தீவிரவாதிகள் தங்களது ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைய வேண்டும் என அம்மாநில முதல்வர் பாரூக் அப்துல்லா அறிவித்துள்ளது தெரிந்ததே. (இ-10)

# ஈழத் தமிழர்கள் அகதிகளாகி தமிழ்நாட்டுக்குச் செல்வது ஏன்?

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலின் இலங்கை விஜயம் சுகவீனம் காரணமாக பின்போடப்பட்டுள்ளது, எனினும் இந்த விஜயம் விரைவில் இடம்பெறவாய்ப்புண்டு. குஜ்ராலின் இலங்கை விஜயத்தின் போது இந்தியா செல்லும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினை முக்கியமாக ஆராயப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக பி.பி.ஸி தென் கிழக்கு ஆசிய சேவையில் இடம் பெற்ற விவரணக்கண்ணோட்டத்தை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

மீன் பிடிப்பதற்கான உரிமை, தனிநாடு கோரிப் போராடும் போராளிகளின் விடயம், இலங்கையில் இருந்து இந்தியா செல்லும் அகதிகள் பிரச்சினை ஆகிய விடயங்கள் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தின்போது ஆராயப்படலாம்.

கடந்த ஜூலை மாத முடிவு வரை சுமார் 2 ஆயிரத்து 500 ஈழத் தமிழ் அகதிகள் தமிழ்நாடு சென்றுள்ளனர்.

இவர்கள் ஏன் தமிழ் நாடு செல்கிறார்கள் என்பதை அறிய நான் அண்மையில் தமிழ்நாடு சென்றிருந்தேன்.

### 2ஆவது இடத்தில் தமிழர்கள்

இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினராக உள்ளனர்.

அவர்களது மொழியும், கலாசாரமும் பெரும்பான்மையினரான பௌத்த சிங்களவர்களின் மொழியாலும், கலாசாரத்தாலும் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தென் இந்தியாவில் ஐந்தரைக் கோடி தமிழர்கள் பிறப்புரிமையுடன் வாழ்கின்றனர். எனவேதான் போரினால் அகதிகளான ஈழத்தமிழர்கள் தமிழ்நாடு செல்கின்றனர்.

''அவர்கள் எங்கள் சொந்தச் சகோதரர்கள். எங்களது சம்பிரதாயங்கள் மிகப் பழைமை வாய்ந்தவை. லத்தீன் மொழியைப் போலவே தமிழ் மொழியும் ஒரு பழைய மொழி ஆகும். எங்களது பண்பாடு மிகவும் பழைமையானது. எனவே இலங்கைத் தமிழர்களுக்கு எல்லாவிதத்திலும் உதவத் தயாராயிருக்கிறோம்'' என்றார் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர்.

எந்த ஒருவரும் அரசியல் காரணத்துக்காக அரசியல் தஞ்சம் கோரினால் அவருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்படவேண்டும் என்பதே தமிழக மக்களின் நிலைப்பாடாக உள்ளது.

யுத்தம் காரணமாக மக்கள் அகதிகளாக தமிழ்நாடு செல்கின்றனர். ஆனால் விடுதலைப்புலிகளின் வற்புறுத்தல் காரணமாகவே மக்கள் தமிழ்நாடு செல்கின்றனர் என சிறிலங்கா அரசு கூறுகிறது. மீண்டும் இந்தியாவை தலையிட வைக்கும் முயற்சி இது என்றும் கருதப்படுகிறது.

### ''சோ''வின் கருத்து

தமிழ்நாட்டிலுள்ள அரசியல் அவதானிகளின் கூற்றோ வேறு விதமாக உள்ளது.

சென்னையிலிருந்து வெளிவரும் அரசியல் வார இதழின் — ஆசிரியர் ராமசாமி (துக்ளக்–சோ) பின்வருமாறு தெரிவித்தார்.

''இலங்கையில் உள்ள தமிழர்களின் நிலைமை கடினமானது. அவர்கள் விடுதலைப் புலிகளால் தமது வதிவிடங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பயன் தரவல்ல பாதுகாப்பை இலங்கை அரசினால் வழங்க முடியாது போனால், அவர்கள் எங்கே செல்ல முடியும்? எனவே இயல்பாகவே இந்தியா அவர்களின் நலனைக் கவனிக்கவேண்டும்.

இது இந்தியாவுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய நிலை அல்ல. ஆனால் இந்தியாவால் திருப்திகரமாக இதைச் செய்ய முடியாது. ஐ நா. தீர்மானத்திற்கு அமைய நாட்டை விட்டு ஓடும் எவருக்கும் அரசியல் தஞ்சம் வழங்கப்பட வேண்டும். இது அரசியல் காரணமாக மட்டுமே இருத்தல் வேண்டும்'' என்றார்.

கடந்த முறை 1987 ஆம் ஆண்டு வாக்கில் இலங்கையிலிருந்து பெருமளவிலான அகதிகள் இந்தியா சென்றனர். இலங்கைக்கு இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து அகதிகளின் படையெடுப்பு நிறுத்தப்பட்டது.

கொழும்பில் இருந்த அரசுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இந்தியா இலங்கை விடயத்திலிருந்து விடுபட்டுக்கொண்டது. அன்றிலிருந்து இலங்கை விவகாரத்தை ''முற்றிலுமான உள்நாட்டு விவகாரம் எனக் கூறி ஒதுங்கி விட்டது. ஆனால் எப்போதும் இந்நிலை பேணப்படவில்லை.

1991 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு ஈழப் பிரிவினைவாதப் போராளிகளுக்கு ஆதரவு அளித்து வந்தது. முன்னைநாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின்படுகொலையை அடுத்துநிலைமை தலைகீழாக மாறியது. தற்போது கடுங்கோட்பாளர்களே போராளிகளை ஆதரிக்கின்றனர்.

### கோபாலசாமி கருத்து

இது குறித்து மறுமலர்ச்சி தி மு.க தலைவர் வி. கோபாலசாமி பின்வருமாறு தெரிவித்தார்:

''தண்ணீரிலும்பார்க்க இரத்தம் தடிப்பானது. எனவே துன்பத்தை அனுபவித்து வரும் இலங்கையின் வடக்கு —கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தொடர்பாக ஒவ்வொரு தமிழனுக்கும் அனுதாபம் உண்டு'' என்றார்

ஸ்ரீலங்காவின்சனத்தொகை 1 கோடியே 70 இலட்சமாகும். இங்கு பெரும்பான்மையினர் பௌத்த சிங்களவர்கள் பௌத்த சமயமும், இந்து சமயமும் தென் கிழக்காசியக் கலாசாரத்துடன் தொடர்புடையவை.

### பௌத்த காங். செயலாளர்

இது குறித்து பௌத்த காங்கிரஸ் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் —

''எமது கலாசாரம் இந்திய கலாசாரத்தின் ஒருபகுதியே ஆகும். பௌத்த மதம் இந்தியாவிலிருந்தே வந்தது. பல யாத்திரிகர்கள்— பாஹியன் போன்றோர்கள் ஸ்ரீலங்காவுக்கும், இந்தியாவுக்கும் விஜயம் செய்துள்ளனர்'' எனத் தெரிவித்தார்.

### பிரட்மன் வீரக்கோன்

பலகாலமாக ஜனாதிபதியின் ஆலோசகராகப் பணியாற்றிய பிரட்மன் வீரக்கோன் பின்வருமாறு தெரிவித்தார்:-

''ஸ்ரீலங்காவில் நிலைமைகள் அப்படியான ஒரு மோசநிலையில் இல்லை என்ற நிலைப்பாட்டைப் பேணவே அரசு முயற்சி எடுத்துவருகிறது. பொதுமக்களைப் பாதிக்காத வகையிலேயே யுத்தம் நடத்தப்படுகிறது என்ற ஒரு வெளிப்பாட்டைத் தோற்றுவிக்க அரசு கடும் முயற்சி எடுத்து வந்தது.

'ஆனால் தற்போது மக்கள் அகதிகளாக நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள். எனவே இது அரசின் கூற்றுக்களுக்கு முரண்பட்டதாகக் காணப்படுகிறது.

''இந்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அகதிகள் அங்கு செல்வது அவர்களுக்கு ஒரு பிரச்சினையே. விடுதலைப் புலிகள் தமிழ் அகதிகளை தங்களது ஒரு கருவியாகப் பயன்படுத்தினால் அது தமிழ்நாடு அரசுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்'' என்றார்.

### பேராசிரியர் சிவத்தம்பி

இந்தியாவுடனான தொடர்புகள் ஏன் இன்றியமையாதவை என தமிழ் மக்கள் கருதுகிறார்கள் என பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியிடம் வினாவியபோது:-

''சகோதர உறவு என்ற உணர்வு உள்ளது. நாங்களும் தமிழர்கள், அவர்களும் தமிழர்கள்.

'மொழி, கலாசாரம் என்பவற்றில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்த நாட்டில் எப்போதும் மக்களை சிங்களவர், தமிழர் என்ற கண்கொண்டே பார்க்கிறோம். முன்பு ஒரு காலத்தில் சமூகம் (Society) என்ற சொல்லைப்பயன்படுத்தி வந்தோம். தமிழர் பிரச்சினை ஒரு சமூகப் பிரச்சினையாக இருந்தது. ஆனால் நாங்கள் தற்போது 'இனம்' என்ற பெயரைப் பயன் படுத்துகிறோம். தற்போது இனக் குழுக்களாக (Ethnic Groups) இயங்குகிறோம்.

''இதிலிருந்து இரு சமூகங்களின் உறவுகளும் எவ்வாறு கீழ் நோக்கிச் செல்கின்றன என்பதை அவதானிக்கலாம்,

'ஸ்ரீலங்காவில் நல்ல சிங்களவர்களும், நல்ல தமிழர்களும் இருக்கிறார்கள். ஆனால் நல்ல ஸ்ரீலங்கா வாசிகளை உருவாக்க முடியாமல் இருப்பது துர்அதிர்ஷ்டவசமானதாகும்.

''ஒரு சில ஆங்கில அறிவு படைத்தவர்களைத் தவிர அர்த்தமுள்ள ஸ்ரீலங்கா தேசியத்தைக் கட்டியெழுப்ப எவருமில்லை.'' எனத் தெரிவித்தார்.

தமிழர்கள் தென் இந்தியாவின் ஆதரவை எதிர்பார்க்கின்றனர். அதேநேரம் 'இந்தியா குறித்து சிங்களவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இலங்கைப் பிரச்சினையை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகக் காட்ட எவ்வளவு தூரம் உத்தியோக பூர்வ ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இரு தரப்பினரும் இவ்விடயத்தில் இந்தியாவுக்குரிய பங்கு என்ன என்பதை அறிந்துள்ளனர்' (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் தாக்குதல் நடந்த வேளை

# பொறுப்பான தளபதி முகாமில் இல்லை

## அவர் கொழும்பு சென்றதன் பின்னணி என்ன?

ஒரு யுத்தத்தில் எதிரியின் இராணுவ வசதிகள், வளங்கள், உடைமைகள் ஆகியவற்றோடு ஆட்பலமும் கணிசமாக அழிக்கப்படும் போது தான் அது ஓர் இராணுவ வெற்றி என்று கருதப்படலாம் என்பது போரியல் அறிஞர்கள் கூறும் அரிச்சுவடி.

ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் படையினரின் ''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கைகளின் போது இத்தகைய பேரிழப்புகள் ஏதுமின்றியே புலிகள் வன்னிப் பெருநிலப்பரப்புக்கு தமது தளத்தை —களத்தை —மாற்றிக் கொண்டார்கள்.

இந்த இராணுவத்துறை 'அரிச்சுவடி' புரியாத இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த, யாழ். குடாநாட்டின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியதும், ''ரோய்ட்டர்'' செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய பேட்டியில்—

''புலிகளால் பூநகரி மீது மேற்கொள்ளப்பட்ட 'தவளைப் பாய்ச்சல்' போன்ற பெரிய தாக்குதல்களை இனி மேற்கொள்ள முடியாது'— எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அவரின் இராணுவ அறிவுக்குக் கிடைத்த பதில்தான் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல்!

### கனகச்சிதமாக திரட்டப்பட்ட தகவல்கள்

முல்லைத்தீவுமுகாமை 'இலக்கு' வைத்த போதே முகாமின் அமைப்பு, காவலரண்களின் நிலை, அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், முகாமைத் தாக்குவதற்கு வசதியாக நிலை எடுக்கக் கூடியஇடங்கள், தொடர்ச்சியான விநியோகத்துக்கு பாதுகாப்பான பாதைகள் போன்றவை புலிகளின் உளவுப் பிரிவினரால் கனகச்சிதமாகத் திரட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஒரு முகாம் மீது தாக்குதலைத் தொடுப்பதற்கான உளவு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, உளவு நடவடிக்கையில் ஈடுபடும் உளவாளி ஒருவர் உயிருடனோ அல்லது சடலமாகவோ முகாம் பகுதியில் சிக்கிக் கொண்டால் அல்லது அவரது நடமாட்டம் குறித்து எதிரி அறிந்து கொண்டால் எதிரி உஷாராகி விடுவான். இதைக் கவனத்தில்கொண்டே உளவு நடவடிக்கைத் திட்டங்கள் வகுக்கப்படுவது வழக்கம்.

முல்லைத்தீவு முகாம் பற்றிய உளவு நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் இந்த விவகாரத்தில் முழுக் கவனமாக இருந்துள்ளனர். முல்லைத்தீவு முகாமைத் தாக்குவதற்காக அந்த முகாம் குறித்து உளவு பார்க்கப்படுகின்றது என்ற சிறிதளவு சந்தேகம் கூட படைகளுக்கு ஏற்படாதவாறு புலிகளின் உளவுப் பிரிவு செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இத்தகைய தாக்குதல்களின் வெற்றிக்கு உளவுப் பிரிவினரே அடித்தளம் இடுவார்கள். முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலிலும் புலிகளின் உளவுப் பிரிவு தனது பணியை நூற்றுக்கு நூறு வீதம் திறம்பட ஆற்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பிரபாவே நேரடியாகத் திட்டங்களை வகுத்தார்

உளவுப் பிரிவு மூலம் தகவல்களைத் திரட்டி தாக்குதல் திட்டத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே நேரடியாக வகுத்தார் என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் திட்டத்தில் பின்வரும் முக்கிய விடயங்கள் அடங்கியிருந்தன:

★ திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தி முகாமைக் கைப்பற்றி அதனைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது.


★ முகாம் மீது தாக்குதல் நடக்கும் சமயத்தில் முகாமிலிருக்கும் படைகளுக்கு வெளியிலிருந்து வரக்கூடிய உதவிகளைத் தடுக்கும் வகையில் கடலிலும், தரையிலும் 'கட் அவுட்' போட்டு செயற்படுவது.

★ முகாமில் உள்ள ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள், இராணுவ வாகனங்கள், ஜெனரேட்டர் போன்ற உபயோகப் பொருள்கள் மற்றும் இராணுவ தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் போன்றவற்றை இயன்றளவு சேதமின்றிக் கைப்பற்றி. வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள புலிகளின் பாதுகாப்பான தளங்களுக்குக் கொண்டு செல்வது.

★ முகாமிலிருந்த படையினரைத் தேடி அழிப்பது; உயரதிகாரிகள் உட்பட கணிசமான தொகையினரை மட்டும் கைது செய்வது.

★ முகாமை இயன்ற காலம் வரை கைப்பற்றித் தக்கவைப்பது; தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியாமல் போனால் முகாமை கைவிட்டு வெளியேறும் போது முகாமை முற்றாகத் தகர்த்து விட்டுச் செல்வது.

— இவைதான் தலைவர் பிரபாகரன் வகுத்த திட்டத்தில் அடங்கியிருந்த முக்கிய அம்சங்கள்.



### ''ஓயாத அலைகள்'' பெயர்ப் பொருத்தம்

இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு 'ஓயாதஅலைகள்' என்று பிரபாகரன் பெயர் சூட்டியிருந்தார். அந்தப் பெயர்ப் பொருத்தத்தை ஸ்ரீலங்கா பாதுகாப்பு உயரதிகாரிகளே பின்னர் ஒப்புக் கொண்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு அந்தப் பெயர் பொருந்தியது எப்படி? அதனைப் பின்னர் பார்ப்போம்.

★ ★ ★

### தளபதிகள் இல்லாதசமயம்

தாக்குதலுக்கு உள்ளான முல்லைத்தீவு தளத்தில் தான் ஸ்ரீலங்கா இராணுவத்தின் 215 ஆவது பிரிக்கேட் தலைமையகம் அமைந்திருந்தது. அத்துடன் ஏழாவது விஜபா காலாட்படை அணியும், சிங்க படை அணியின் ஏழாவது பட்டாலியனும் அங்கு நிலை கொண்டிருந்தன.

## பகுதி 4

முகாம் தாக்குதலுக்கு உள்ளான சமயம் பிரிகேட் கமாண்டர்கேணல் லோறன்ஸ் பெர்னான்டோவோ அல்லது உதவிக் கமாண்டர் லெப்டினன்ட் கேணல் குணரட்ணாவோ முகாமில் இருக்கவில்லை அவர்கள் கொழும்பு சென்றிருந்தனர்.

அடுத்த சிரேஷ்ட அதிகாரியான — ஏழாவது விஜபா காலாட் படை அணியின் கட்டளைத் தளபதியான — மேஜர் அலிபா என்பவரே அச்சமயம் முகாமுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்தார்.

முகாமின் தளபதியும், உதவித் தளபதியும் இல்லாத சமயம் பார்த்து — தளத்தை பாதுகாத்து, படைகளை ஒன்று திரட்டி, எதிர்த்து நின்று போராட ஒருங்கிணைப்புச் செய்வதற்கு உரிய அதிகாரிகள் இல்லாத வேளை பார்த்து — புலிகள் இத் தாக்குதலைத் தொடுத்தார்களா?

அல்லது புலிகளின் அதிர்ஷ்டம் காரணமாக அவர்கள் தாக்குதல் தொடுத்த சமயம் முகாமின் தளபதியும், உதவித் தளபதியும் இல்லாத நிலை இருந்ததா?

விடை தெரியாத கேள்விகள் இவை.

### தளபதிகளை கொழும்புக்கு அழைத்தது யார்?

ஆனால் இந்த இரு அதிகாரிகளும் முகாம் தாக்கப்படுவதற்கு முதல்நாள் தான் முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டு கொழும்பு வந்திருந்தார்கள்.

அரலித்துறையில் லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவும், மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையாளர்கள் அணிக்கு ''சூரியகுமார்'' என்ற பெயருடைய ஒரு தமிழ் நபர் உதவி வருபவர் போல் செயற்பட்டு வருகின்றார் என்றும் —

உண்மையில் மறைமுகமாகப் புலிகளுக்கு இந்த நபர் உதவி வருகின்றார் என்றும்—

அவரே முல்லை முகாம் தளபதியை அந்த முகாம் தாக்குவதற்கு முதல் நாள் அவசர அவசரமாக கொழும்புக்கு அழைப்பித்தாராம் என்றும் —

பிரதான எதிர்க்கட்சி ஒன்றின் எம். பி. ஒருவர் பகிரங்கமாகக் குற்றஞ் சுமத்தியிருக்கின்றார்.

மேற்படி ஆணைக்குழு விசாரணையில் சாட்சியமளிப்பதற்கு அந்தத் திகதியில் (ஜுலை 18 ஆம் திகதி) முல்லைத்தீவு முகாம் தளபதி கட்டாயம் கொழும்பில் நிற்க வேண்டும் என இந்த நபர் வற்புறுத்தியதால், முகாம் தளபதி தமது முகாமை விட்டு வெளியேறி கொழும்புக்கு அவசரமாக வர வேண்டி நேர்ந்தது என்றும் —

ஆனால் அத்தினத்திலோ அல்லது அடுத்து வந்த தினங்களிலோ ஆணைக்குழு முன் ஆஜராகும்படி அழைக்கப்படவோ அல்லது ஆஜராக வேண்டிய தேவையோ முல்லைத்தீவு முகாம் தளபதிக்கு ஏற்படவில்லை என்றும் அந்த எம். பி. சுட்டிக் காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு முகாமை வீழ்த்தும் புலிகளின் முயற்சிக்கு உதவும் வகையில் அந்த நபர், முகாம் தளபதியை முகாமிலிருந்து அப்புறப்படுத்தியிருக்கின்றார் என்பதே அந்த எம். பியின் குற்றச்சாட்டு. இந்த விடயம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்பது அவரின் வாதம்.

அவரின் குற்றச்சாட்டில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கும்? ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

ஆனால் முகாம் தாக்கப்பட்டபோது அங்கு அதனைப் பாதுகாப்பதற்குத் தளபதியோ, உதவித் தளபதியோ இல்லாமல் போனது புலிகளுக்கு வாய்ப்பாயிற்று என்பது மட்டும் உண்மை.

## தொகுப்பு: கவி

### அமாவாசை இருட்டில் தாக்குதல் ஆரம்பம்

1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் திகதி அதிகாலை ஒரு மணி.

முல்லைத்தீவு முகாம் பகுதியை அமாவாசைக் கால பின்னிரவு இருட்டு கரிய போர்வையால் போர்த்தியிருந்தது.

பிரபாகரனின் திட்டப்படி கரும் போர்வையைப் பயன்படுத்திக் கொண்டு இருளில் பல முனைகளில் இருந்தும் புலிகளின் அணிகள் முகாமை நோக்கி நகரத் தொடங்கின.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் மூவாயிரம் போராளிகள் பங்கு கொண்டதாக சில பத்திரிகைகளும், இராணுவ அதிகாரிகளும் கூறுகின்றனர். ஆனால் வேறு விடயமறிந்த சில இராணுவ ஆய்வாளர்கள் அல்லது கட்டுரையாளர்கள் ஆயிரம் முதல் ஆயிரத்தைனூறு போராளிகளே பங்குபற்றினர் என்று கூறினர்.

எது, எப்படியாயினும் இது குறித்து விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ அறிவிப்பு வரும் வரை பல நூற்றுக் கணக்கான போராளிகள் பங்குபற்றினார்கள் என்று மட்டுமே நாம் இப்போதைக்குக் கருத முடியும்.

### நான்கு பக்கத்தாலும் புலிகள் தாக்குதல்

முகாமை நோக்கி நகர்ந்த புலிகளின் தாக்குதல் அணிகள் வடக்கு, தெற்கு பாதுகாப்பு அரண்களை ஊடறுத்துக் கொண்டு முகாமுக்குள் நுழைந்ததாகவே கொழும்புப் பத்திரிகையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் புலிகளின் தாக்குதல் அணிகள் கடல் வழியாகவும், தரைவழியாகவும் — முகாமைச் சூழ நான்கு பக்கங்களாலும் — முகாமை நெருங்கித் தாக்கியிருக்கின்றனர்.

முகாமின் கிழக்குப் புறமாக கடல் வழியாகவும் —

மேற்குப் புறமாக நந்திக் கடல் என்ற பரந்த களப்பு வழியாகவும்—

வடக்கு எல்லைப்புறத்தில் வட்டுவாகல் கிராமப் பக்கத்தாலும் —

தெற்குப் புறமாக பரந்த புதர்க் காடுகள் வழியாகவும் —

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் அந்தக் காரிருள் வேளை, சந்தடி, சத்தம், ஆரவாரமின்றி தமது பாரிய நகர்வை மேற்கொண்டு, முகாம் பகுதியை நெருங்கி, முகாமை முற்றுகையிட்டு, நிலை எடுத்துக் கொண்டன.

### முதல் வேட்டு

அதிகாலை 1 30 மணி.

தமது படையணிகள் அனைத்தும் குறிப்பிட்ட இடங்களில் நிலையெடுத்துத் தயாராகி விட்டனவா என்று தமது ''வோக்கி டோக்கி'' கொண்டு சரிபார்த்தார் புலிகளின் துணைத் தளபதி பால்ராஜ்.

தாக்குதல் பிரிவுகளின் முனைத் தளபதிகள் தமது தயார் நிலையைத் தெரிவித்ததும் முதல் வேட்டு தீர்க்கப்பட்டது.

தாக்குதல் தொடங்கப்படுவதற்கு உரிய ''சிக்னல்'' அதுதான். அவ்வளவு தான். முல்லைத்தீவு முகாம் ரணகளமானது.

முகாம் தாக்குதலுக்கு உள்ளான சமயம் அங்கு எத்தனை துருப்புகள் இருந்தார்கள்? அவர்களில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள்? எத்தனை பேர் காணாமல் போனார்கள்? எத்தனைபேர் புலிகளிடம் பிடிபட்டனர்? எத்தனை பேர் தப்பிச் சென்று பாதுகாப்பாக வேறு அரச படை முகாம்களுடன் இணைந்து கொண்டனர்? எத்தனை பேர் அரச படைகளால் மீட்கப்பட்டனர்? — இவை எல்லாம் குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இந்த விவகாரம் தொடர்பாக இட்டதிட்ட சரியான புள்ளி விவரம் என்னவென்பதை தனியான ஓர் அத்தியாயத்தில் பார்ப்போம்.

### தூக்கத்தில் இருந்தனர்

ஆனால் புலிகளின் அதிரடித் தாக்குதல் ஆரம்பித்த அதிகாலை வேளை முகாமின் முதலாம் சுற்றுப் பாதுகாப்பு நிலைகள், இரண்டாம்சுற்றுப் பாதுகாப்பு அரண்கள் போன்றவற்றில் காவல் கடமையில் சுமார் நானூறு சிப்பாய்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இந்து நூலகம்.



# வலிகாமத்தில் புலிகளைத் தேடிபடையினர்நடவடிக்கை

## இராணுவ தளபதி தகவல்

யாழ். மாவட்டத்தில் வலிகாமப் பிரிவில் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளைத் தேடி ஒழிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் தற்சமயம் ஈடுபட்டுள்ளார்கள் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோகான் தளுவத்த நேற்று ''லங்கா புவத்'' துக்குத் தெரிவித்தார்.

பகல் வேளையில் தங்களை சாதாரண குடிமக்கள் போல் காட்டிக் கொள்ளும் இவர்கள் இரவு வேளையில் நாசகார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினர்.

அரசாங்கத்துக்கு அவப்பெயரை உண்டு பண்ணும் வகையில் பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்கும்படி அவர்கள் வர்த்தகர்களை வற்புறுத்தி வருகிறார்கள்.

விடுதலைப் புலிகளுடன் ஒத்துழைத்து வந்த உதவி அரசாங்க அதிபர் ஒருவர் அவர்களைச் சந்தித்த வேளையில் கைது செய்யப்பட்டார் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

(இ-3)

# பலஸ்தீனம் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் ''இஸ்ரேல் - பலஸ்தீன சமாதான ஒப்பந்தம் எதிர்நோக்கும் நெருக்கடி'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

பதில் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கருத்தரங்கில் கருத்துரை வழங்கவுள்ளார். ஆர்வமுள்ளோர் அனைவரும் மேற்படி கருத்தரங்கில் பங்கு கொள்ளலாமென புவியியற் கழகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# வெங்காயம் அனுப்ப இந்தியாவிலிருந்து சாக்கு

வலி. தென்மேற்கு, ஒக். 23

யாழ். விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் வெங்காயத்தைக் கொழும்புக்கு அனுப்புவதற்கு தேவையான சாக்குகள் இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட உள்ளன.

சாக்குகள் வந்து சேர்ந்தவுடன் யாழ். குடாநாட்டில் வெங்காயக் கொள்வனவு ஆரம்பமாகும் என அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் இருந்து இச்சாக்குகள் எடுத்துவரப்பட விருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேசமயம் — அறுவடை செய்த வெங்காயத்தை உள்ளூரில் மலிவு விலைக்கு விற்பனை செய்யவேண்டாம் என வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் விவசாயிகளைக் கேட்டுள்ளன.

மிக விரைவில் கொள்வனவு நடைபெறும் என அவை வாக்குறுதியளித்துள்ளன.

(இ-145)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக் 23

புவியியற் சிறப்புக்கலை இறுதிவருடம் பயிலும் மாணவர்கள் மேற்கொள்ளவுள்ள ஆய்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு புவியியற்றுறை கருத்தரங்கு அறையில் இடம்பெறவுள்ளது. (இ)

தமிழ் - ஆங்கில தட்டச்சு

மற்றும்

றோணியோ வேலைகளுக்கு

அருண்

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# முல்லைத்தீவில் தாக்குதல் நடந்த.....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரையே கடமையில் இருந்தார்கள். ஏனையோர் ஓய்வெடுத்துக் கொண்டும், தூங்கிக்கொண்டும் இருந்தார்கள்.

அச்சமயத்தில்தான் அதிரடித் தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முதல் சிக்னலாக ஒரு வேட்டு தீர்க்கப்பட்டது.

அவ்வளவுதான். நான்கு புறத்திலிருந்தும் முகாமை நோக்கி ஷெல் மழை பொழியத் தொடங்கியது. அதே சமயம் றொக்கட் லோஞ்சர்கள், இயந்திரத் துப்பாக்கிகள் போன்றவற்றால் முகாமை நோக்கிப் பொழிந்து கொண்டு, புலிகளின் தாக்குதல் அணிகள் முகாமை நோக்கி முன்னேறத் தொடங்கின.

முன்னணிக் காவலரண்களில் கடமையில் இருந்த படையினருக்கோ, தூங்கி, ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த துருப்புகளுக்கோ அங்கிருந்த கீழ் மட்ட அதிகாரிகளுக்கோ நிலைமையைக் கணிப்பிட்டு பதில் வியூகம் வகுக்க வாய்ப்பே கிடைக்கவில்லை தற்காப்பு யுத்தம் ஒன்றில் படைகளை ஈடுபடுத்தவும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

### புலிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம்

முழங்கிக் கொண்டிருந்த துப்பாக்கிகளின் சத்தமும், ஷெல் மழையின் அதிர்வும் முகாமைச் சூழ்ந்து உள்ளே பாயத் தயாராக பல நூற்றுக் கணக்கில் புலிகள் திரண்டிருக்கின்றனர் என்ற உண்மையை — முகாமுக்குள் சிக்கியுள்ள படைத் தரப்பை விட, சூழ்ந்து நிற்கும் புலிகளின் எண்ணிக்கை பெரும் அளவில் அதிகம் என்ற யதார்த்தத்தை — உள்ளே இருந்த படை அதிகாரிகளுக்கும், படையினருக்கும் உணர்த்தத் தவறவில்லை.

திடீர்த் தாக்குதலினால் குழம்பிப் போன படைகள், முகாமின் முற்றுகையை உடைத்துக் கொண்டு ஏதேனும் ஒரு வழியால் முகாமை விட்டுத் தப்பி ஓடி உயிரைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே முனைப்பாக இருந்தன.

புலிகளின் ஆரம்ப அதிரடி—

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து தம்மை ஒழுங்குபடுத்தி, முகாமைத் தக்க வைத்துக் கொள்ளும் ஓர் ஒழுங்கு முயற்சியில் ஈடுபட முடியாத அளவுக்கு முகாம் துருப்புகளை நிலைகுலைய வைத்து விட்டதால், இலகுவாக முகாமின் ஒரு பகுதி விடிவதற்குள் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது.

ஆனால் இந்த வெற்றிக்கு [illegible] நாள் இரவிலேயே நூறுக்கும் அதிகமான தனது போராளிகளின் உயிரை விடுதலைப்புலிகள் செலுத்த வேண்டியிருந்தது.

### கொழும்பில் பதற்றம்

முகாம் மீது பெருந்தாக்குதல் தொடுக்கப்பட்ட அடுத்த சிலநிமிடங்களிலேயேகொழும்பில் பாதுகாப்பு உயரதிகாரிகளின் தொலைபேசிகள் அலறத் தொடங்கி விட்டன.

தாக்குதல் ஆரம்பித்து ஒரு சில மணிநேரத்துக்குள்- விடிவதற்குள்- இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்தை, கடற்படைத் தளபதி றியர் அட்மிறல் மொஹான் சமரசேகரா, விமானப்படைத்தளபதி எயர் வைஸ் மார்சல் ஒலிவர் ரணசிங்க ஆகியோர் உடனடியாக விமானம் மற்றும் ஹெலி மூலம் பறந்து வந்து ஆனையிறவு முகாமில் தரையிறங்கினர்.

அங்கு முல்லைத்தீவு முகாமையும், அங்கு சிக்குண்டுள்ள அரசுத் துருப்புக்களையும் மீட்கும் அவசரத்திட்டத்தை அவர்கள் ஒன்று கூடி வகுப்பதில் மும்முரமாக இருந்தனர்.

### மீட்புத் திட்டம்

கடந்த வருடம் முல்லை முகாமின் கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் கும்பன் பெஹ்ரன் இருந்த போது முகாமின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மறு சீரமைக்கப்பட்டதாக இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டால் முகாமை மீட்பதற்கான நடைமுறைத் திட்டம் ஒன்றையும் அப்போது பிரிகேடியர் பெஹ்ரன் தயாரித்து சமர்ப்பித்திருந்தார். அத்திட்டத்தையே முப்படைத் தளபதிகள் அப்போது அவசர அவசரமாகப் பரிசீலனை செய்து செயற்படுத்த முனைந்தனர்.

இத்திட்டத்தின் படி —

முகாம் இரவு வேளை தாக்கப்பட்டால் மீட்புப்படை அணிகள் கடல் வழியாகவும், தரைவழியாகவும் அடுத்த நாள் விடிந்த கையோடு காலை நேரத்திலேயே முகாமுக்குள் வந்திறங்க வேண்டும். அதற்கேற்ப முகாமுக்குள் 'ராடர்' வசதி செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அவை செயற்படுவதற்கு வசதியாக என்று மேலதிகமாக இரண்டாவது ஜெனரேட்டர் போன்ற அத்தியாவசியக் கருவிகளும் பொருத்தப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டே முல்லை முகாமை மீட்பதற்கான முதலாவது அவசர மீட்பு நடவடிக்கையான ''மும்முனைத் தாக்குதல் இராணுவ நடவடிக்கை'' (''ஒப்பரேசன் திரவிட பஹர'') என்ற தாக்குதல் திட்டம் ஆனையிறவு முகாமில் வைத்து முப்படைத் தளபதிகளாலும் தயாரிக்கப்பட்டு, உடன் செயற்படுத்தத் தொடங்கப்பட்டது.

### தொடர்பு வழி இல்லாமல் போயிற்றா?

புலிகளின் அதிரடித் தாக்குதலினால் முல்லைத்தீவு முகாமின் தொலைத் தொடர்பு கோபுரம் செயல் இழந்து விட்டதாகவும் —

இதனால் முகாமுடனான தொடர்புகள் துண்டிக்கப் பட்டிருப்பதாகவும் —

எனவே முகாமில் சிக்கியுள்ள படையினரின் கதி குறித்து எதுவும் கூறமுடியா திருப்பதாகவும் —

தாக்குதல் தொடங்கிய நாள் முதல் அடுத்து வந்த நாள்களில் பாதுகாப்புப் பிரதி அமைச்சரும், ஏனைய மூத்த படை அதிகாரிகளும் கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் முகாமில் இருந்த படை அணிகளில் முதல் நாள் இரவு அதிரடித் தாக்குதலில் தப்பிய கணிசமான எண்ணிக்கைப் படையினர் இரண்டு அணிகளாகப் பின்வாங்கி வெவ்வேறு இடங்களில் நிலைகொண்டிருந்தனர் என்றும் —

அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்ற சிறிய அளவிலான தொலைத் தொடர்பு கருவிகள் மூலம் வெளியில் இருந்த படை முகாம்களுடன் தொடர்புகளை வைத்திருந்தனர் என்றும் —

விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த அணிகள் கொடுத்த தகவல்களை வைத்துக் கொண்டே முகாமை மீட்கும் முதலாவது அவசரத்திட்டம் 18ஆம் திகதி காலைக்கு முன்பாக - அரசு அவசரமாக - ஆனையிறவு முகாமில் வைத்து முப்படைத் தளபதிகளாலும் கூட்டாகத் தயாரிக்கப்பட்டது.

இதன்படி - ''மும்முனைத் தாக்குதல்'' திட்டப்படி - தரை, கடல், ஆகாய மார்க்கமாக மீட்புப் படை அணிகளை முல்லை முகாம் பகுதிக்கு நகர்த்தி முகாமையும், அங்கு தப்பிப் பிழைத்திருக்கும் துருப்புகளையும் மீட்க வேண்டும்.

இத்திட்டம் முழுதாக செயற்படுத்தப்பட்டதா? அது பலனளிக்காமல் போனது ஏன்? முப்படைத் தளபதிகளின் அவசர மீட்புத்திட்டம் அவசர கோலத்தில் கலைந்தது எங்ஙனம்? - விவரம் நாளைய உதயனில்.

(மிகுதி நாளை)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 02 — 01 — 1905

உதிர்வு: 24 — 09 — 1996

## திருமதி லில்லி பசுபதி இராசையா

(ஓய்வு பெற்ற ஆசிரியை, ஏழாலை வடக்கு)

நினைவு அஞ்சலி ஆராதனை 24-10-96 வியாழக்கிழமை காலை 11-30 மணிக்கு (பழைய நேரம்) நடைபெறும். ஆராதனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாக வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி இரத்தினபூபதி தம்பிராசா
களுவாவோடை,
ஏழாலை தெற்கு,
ஏழாலை.

(C/3318)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை

மலர்வு: 23—02—1938

உதிர்வு: 23—09—1996

பாரினிலே உன்கடமை பவனிவர - இன்று
நேரினிலே நீ இல்லை ஐயா!
மந்துவில் மண்ணில் நீர் செய்த கடமை எல்லாம்
விண்ணிலும் கேட்குதையா .....
சோகம் என்ற வாழ்க்கை இல்லை என்றாய்-கிருஷ்ணா
நீ சோதியாய்ப் போவதற்கோ?

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
குஞ்சுத்தம்பி (மகன்),
மந்துவில் வடக்கு.

(49287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சுவிற்சலாந்தில் தொழில் புரியும் 34 வயதுடைய அவிட்ட நட்சத்திரமுடைய மணமகனுக்கு சுவிற்சலாந்தில் அல்லது ஜேர்மனியில் அல்லது உள்நாட்டில் படித்த அழகான மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். தொடர்பு: என். தனபாலசிங்கம், ''முத்து பவனம்'', பங்களா றோட், மீசாலை.

(43298)

### மகாதேவா ஜோதிடம்

சகல ஜோதிட ஆலோசனைகளுக்கும் ஜோதிடர் மகாதேவானவ இல. 140, செல்லர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாமை எனும் முகவரியில் தினமும் சந்திக்கலாம்.

(43270)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் பேசப் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, மே/பா ஜெயந்தி ஸ்ரோர்ஸ், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணார் பண்ணை சிவன் சந்தி)

(43273)

## நெடுந்தீவில் காட்டுப்பன்றி தாக்குதல்

நெடுந்தீவு, ஒக், 23

நெடுந்தீவு மேற்கு வெட்டகாடுபகுதியில் காட்டுப்பன்றியின் தாக்குதலுக்குள்ளான ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூவிலிங்கம் கோணேஸ்வரலிங்கம் என்பவரே காட்டுப் பன்றியின் தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார்.

(இ-111)

## நெடுந்தீவுக்கு 3 ஆம் கட்ட நிவாரணமில்லை

உலர் உணவு அட்டைக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் 3 ஆம் கட்ட விநியோகம் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஏற்கனவே வழங்கப்பட்ட போதும்—

நெடுந்தீவு மக்களுக்கான மூன்றாம் கட்ட நிவாரணப் பொருள்கள் இன்னமும் வழங்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(111)

## உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா மாலை நேர வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

ஜி சீ. ஈ உயர் தரத்தில் 4 பாடங்களில் சித்தியடைந்த கணக்கியல் வேலை அனுபவம் உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

(இ-4)

## பிக்கப் வாகனம்

தென்மராட்சி, ஒக். 23

தென்மராட்சிப் பிரதேச செயலரின் உத்தியோகபூர்வ பாவனைக்கென பிக்கப் வாகனம் ஒன்று செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

(இ-117)

## ஒன்றுகூடல்

### கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்கம்

லங்கா சிமெந்து நிறுவனக்கிளை — காங்கேசன்துறை.

இடம்:- லங்கா சிமெந்து நிறுவனக் காரியாலயம், இணுவில்.

காலம்:- **28 — 10 — 96** திங்கட்கிழமை காலை 10 மணி (பழைய நேரம்).

அனைத்து தொழிற்சங்க அங்கத்தவர்களையும் தவறாது சமூகந் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

ந. கௌரிதரன் (உப செயலாளர்)

லோ. அ. ஜெயக்குமார் (பொருளாளர்)

(43290)

யா/சிதம்பரக் கல்லூரி,வல்வெட்டித்துறை

## பழைய மாணவ சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்: **26 – 10 – 96** (சனி) காலை 10.00 மணி (பழைய நேரம்)

இடம்: கல்லூரி மண்டபம்.

தலைமை: திரு. ச. செல்வேந்திரா (உப தலைவர்).

நிகழ்ச்சி நிரல்

1) தலைமையுரை
2) செயலாளர் அறிக்கை
3) பொருளாளர் அறிக்கை
4) சிறப்புரை அதிபர்
5) புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு
6) பிற விடயங்கள்
7) நன்றியுரை

செயலாளர்
ப. மா. சங்கம்

(43232)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி கிருஷ்ணன் செல்வம்

(முடக்காடு, நெல்லியடி கிழக்கு)

மலர்வு: 12 — 06 — 1935

உதிர்வு: 24 – 09 – 1996

அன்னையே!
பட்ட மரம் தளிர் விட்டது போல்
பாலைவனம் பசுஞ் சோலை ஆனது போல்
இருண்ட எம் வாழ்வில் ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்கு சென்றீர்கள்?
உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!!

அன்னாரின் மறைவின் போது சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோர், அனுதாபங்கள் தெரிவித்தோர்க்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (23 - 10 - 96) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
கி. தர்மலிங்கம் (மகன்)
(ஆசிரியர்)

''கீதாலயம்''
முடக்காடு,
கரவெட்டி.

(C/3323)

## கேதார கௌரி விரதம்

மேற்படி விசேட தினங்களில்

**பால், தயிர்**

தேவையானோர் எமது கிளைகளுடன் தொடர்பு கொள்ளவும்.
குடாநாட்டில் தரக் கட்டுப்பாட்டுடன் கூடிய பால் விநியோகிப்போர்:

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி-3324)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



படைப்பு: 15 — 03 — 1974

அழிப்பு: 26 — 07 — 1996

### தவராசா இதயராஜ்

காக்கைதீவு கடற்பரப்பில் **26-07-96** அன்று படுகொலை செய்யப்பட்ட த. இதயராஜ், அவருடன் சேர்ந்த நால்வருக்கும் எமது கண்ணீர் அஞ்சலி.

பாசத்தைப் பொழிந்து நேசத்துடன் எமை உருவாக்கிய மகனே! பல நாள்கள் ஓடி மறைந்தாலும் நினைவினிலே நிலைத்து நிற்கும் உன் திருமுகத்தைக் கனவினிலே கண்டு கண்டு கணத்துயர் தாங்காமல் காலமெல்லாம் கண்ணீர் வடிய வாழ்கின்றோம்.

இன்று **23-10-96** புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவகலாத:
மனைவி, மகள், அப்பா,
அம்மா, சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

சுதுமலை தெற்கு,
சாவற்கட்டு.

(43189)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு: 10 — 02 — 1970

உதிர்வு: 23 — 09 — 1996

அமரர்

### அருளானந்தம் அலெக்சாந்தர்

(அருள்)

முப்பத்தியொரு நாள்கள் முடிந்திட்ட போதிலுமுன்
முகத்தினிலே தோன்றுமந்த முத்தான சிரிப்பு
எப்பொழுதும் எம் நினைவில் நீங்காது நின்று
எழிலான உன் உருவை இதயமதில் காட்டும்
செப்பரிய சேவைபல செய்திட்ட அருளே
செழிப்பான உன்வாழ்வை இடைநடுவில்
முடித்தாய்
தப்பாமல் இறைவனடி சேர்கவென நாங்கள்
தவறாது வேண்டுகிறோம் இயேசுவையே இங்கு.

உனது பிரிவால் வருந்தும்:
தந்தை, சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(43289)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைவரையான கடல் பகுதியில் கடற்புலிகளின் தாக்குதல் அபாயம்!

## கடற்படையின் நடமாட்டம் ரேடார் மூலம் கண்காணிப்பு

கொழும்பு ஒக். 23

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் உள்ள கடல்பகுதியில் நடமாடும் கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் மற்றும் விநியோகக் கப்பல்கள் கடற்புலிகளின் தாக்குதல் அபாயத்தை எதிர்நோக்கி உள்ளன. இப்பிராந்தியத்தில் நடமாடும் கடற்படையினரின் கப்பல்களை கடற்புலிகள் ரேடார் மூலம் கண்காணித்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் வெற்றிலைக் கேணிக்கு தென்பகுதியில் உள்ள கடற்புலிகளின் தளம் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக பி. பி. ஸி.யின் இலங்கைச் செய்தியாளர் அமல் ஜெயசிங்கா மேற்கண்டவாறு கூறினார்.

பி. பி. ஸி. தென்கிழக்காசிய சேவைக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

திங்கள் காலை விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளமொன்றை அரசபடைகள் தாக்கியுள்ளன. இது இடம்பெற்ற 2 மணித்தியாலங்களுக்குள் விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்தில் நடத்திய தாக்குதலின்போது 6 அரச படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கிழக்கு மாகாணத்தில் அதிகளவு பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விடுதலைப் புலிகள் அக்கறை எடுத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் தமது தரப்பில் ஏற்படும் பெரிய இழப்புக்களை வெளியிடுவதில்லை. 3 மூத்த விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என இராணுவம் தெரிவிக்கிறது. அதைவிட இழப்புக்கள் குறித்த மேலதிகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் இத்தாக்குதலின் போது சில ஆயுத உபகரணங்களை இழந்திருப்பினும் ஒட்டுமொத்த இராணுவ சமநிலையை இது எவ்வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்றே நினைக்கிறேன்.

திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையேயான கடற்பிரதேசத்தை கடற்படை பயன்படுத்தி வரும் வேளையில் இவ்விரு இடங்களுக்குமிடையே கடற்புலிகளின் தளம் அமைந்திருந்தது —

கடற்படையினரின் நடமாட்டத்துக்கு இந்தத் தளம் அச்சுறுத்தலாக அமையலாம் என்பதாலேயே இத்தளம் மீது அரச படையினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட கடற் பிராந்தியத்தில் நடமாடும் பீரங்கிப் படகுகளையும், விநியோகக் கப்பல்களையும் விடுதலைப் புலிகள் ரேடார் மூலம் கண்காணித்து வருகின்றனர்.

எனவே கடற்படையினரின் பாதுகாப்பான நடமாட்டத்துக்கு இந்தக் கடற்புலிகளின் தளம் எப்போதும் இடைஞ்சலாகவே இருக்கும்.

யாழ். குடாநாட்டை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இராணுவத்திடம் ஆளணி வசதிகள் போதாது.

தற்போது புதிதாக இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் விடயத்திலும் மக்கள் அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் மேலும் 10 அல்லது 20 ஆயிரம் படைவீரர்களை இராணுவத்தில் சேர்க்கும் வரை இராணுவம் பெரிய அளவிலான புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நான் நினைக்கவில்லை.

இப்படி அவர் கூறினார். (இ-10)

## ஜப்பானிய தேர்தல் முடிவு

ரோக்கியோ, ஒக். 23

ஜப்பானிய பிரதமர் ஹஸிமோட்டோலின் எதிர்வாத ஜனநாயகக் கட்சி பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது. நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் அக்கட்சிக்கு 234 இடங்கள் கிடைத்துள்ளன. இந்த எண்ணிக்கை நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை — பெற 12 குறைவானதாகும். ஹஸிமோட்டோ 4கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணி அரசாங்கத்தை அமைக்க முயல்வதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-ரி)

## டெங்குக் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு முயற்சி

இந்தியத் தலைநகர் புதுடில்லியில்டெங்குகாய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய சுகாதார அமைச்சுக்கும் டில்லி நிர்வாகத்திற்கும் பிரதமர் தேவகௌடா உத்தரவிட்டுள்ளார்.

நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்தெரிவித்துள்ளார்

சுமார் 5, 4000 பேர் இக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு டில்லியிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டில்லியில் 'டெங்கு' காய்ச்சலால் இறந்தவர்களின் எண்ணிக்கை 229 ஆக உயர்ந்துள்ளது. (இ-10)

## ஐ. நா. பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் பதவி

### இந்தியாவின் முயற்சி தோல்வி

நியூயோர்க், ஒக். 23

ஐ நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தரமற்ற உறுப்பினர் பதவிகளுக்காக ஜப்பான், கோஷ்ராரிக்கா, கென்யா, சுவீடன், போர்த்துக்கல் ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

183 உறுப்பினர்களைக் கொண்ட ஐ. நா. பொதுச் சபையில் நடைபெற்ற தேர்தலில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே இடம்பெற்ற போட்டியில் ஜப்பான் வெற்றிபெற்றது.

இந்தியாவுக்குக் கிடைத்துள்ள தோல்வி தனக்கு அதிர்ச்சி அளிப்பதாக இந்தியப் பிரதிநிதிக் குழுவின் தலைவராக சென்றுள்ள அட்டல் பிஹாரி பாஜ்பே தெரிவித்துள்ளார். (இ-10)

## முல்லைத்தீவுத் தாக்குதல்: விசாரணை நடக்கிறது

கொழும்பு, ஒக். 23

முல்லைத்தீவு இராணுவ முகாம் பேரழிவு பற்றிய விசாரணையை நடத்த தளபதி ரொஹான் தளுவத்தை நியமித்த 3 உறுப்பினர் விசாரணை நீதிமன்றம் கொழும்பிலும் அனுராதபுரத்திலும் இரண்டு அமர்வுகளை நடத்தியுள்ளது.

நீதிமன்றத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பட்ரிக் பெர்னாண்டோ. மேஜர் ஜெனரல் இ. எச் சமரதுங்க, பிரிகேடியர் காமினி ஹெட்டியாராச்சி ஆகியோர் இதன் உறுப்பினர்கள்.

முல்லைத்தீவு பேரழிவிலிருந்து தப்பிய படையினரிடமிருந்து வாக்கு மூலங்கள் பெறப்பட்டன. சிலர் தென்னை மரங்களின் மேல் ஏறியிருந்து தப்பினார்கள். சிலர் கிணறுகளுக்குள் இறங்கியிருந்து உயிர் தப்பினார்கள். ஒரு வீரர் கடலில் நீந்திச் சென்று கடற்படைப்படகு ஒன்றில் ஏறி உயிர் தப்பினார். படகில் அவரை ஏற்றுவதற்கு முன்னர், படகில் இருந்த படையினர் அவரின் அடையாளத்தை நிரூபிக்கும்படி கேட்டனர், அதன் பின்னரே அவர் படகில் ஏற்றப்பட்டார்.

உயிர் தப்பிய சிலர் கொக்குத்தொடுவாய், வெலிஓயா, ஆனையிறவு இராணுவ முகாங்களை காடுகள் ஊடாகச் சென்றடைந்தனர்.

கடற்படைத்தளபதி மொஹான் சமரசேகராவும் முல்லைத்தீவு பற்றி விசாரிக்க ஒரு விசாரணை நீதிமன்றத்தை அமைத்திருக்கிறார். தலைவர் கப்டன் டி. எஸ் ஜி. சமரசிங்கா, கப்டன் அபயக்கூன் பண்டா இதன் உறுப்பினர். (இ-150)

## ஸ்ரீ கீதையில் சிதறிய முத்துக்கள்

★ குந்தியின் புதல்வா, என் பக்தன் நாசமடைவதில்லையென்று நன்கு அறிவுறுத்துக.

★ என்னிடத்தே மனதை வைத்து என்னிடத்து புத்தியைச் செலுத்துக. பின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகம் இல்லை.

★ சர்வகாலமும் என்னை நினைந்து கொண்டே உனது கடமையைச் செய்.

★ பார்த்தா, மூவுலகிலும் எனக்குக் கடமையேதும் கிடையா. அடையாத ஒன்றை இனி அடைந்தாக வேண்டும் என்பதும் இல்லவே இல்லை. ஆயினும் நான் கர்மம் செய்து கொண்டே இருக்கிறேன்.

★ எனது பரம வித்தையிலிருப்பது கீதை. அது பிரம்ம ரூபம் என்பதில் சந்தேகம் இல்லை.

★ எவன் என்னை முற்றாகச் சரண் அடைகிறானோ அவனது ஷேமத்தை நான் காப்பாற்றுவேன்.

## நாளை

ஐப்பசி 8

வியாழக்கிழமை

திதி: திரயோதசி

முன். இரவு 10.55 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

பின் இரவு 4.22 வரை

பிரதோஷ விரதம்

ராகுகாலம்: 1.32-3.02

சுபநேரம்: 7.32-9.02

பகலுக்கும் இரவுக்கும் [illegible]

## நாவற்குழியில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி வீதியில் — யாழ் நகரின் எல்லைப் பிரதேசம் முடியும் இடத்தில் — கண்டி வீதி, செம்மணி வீதி பிரியும் சந்தியில் — ''யாழ். வரவேற்கின்றது'' என்ற வளைவு அமைந்துள்ள பகுதியில் வைத்து சில இராணுவத்தினரால் இவர் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்ததை அவ்வழியாகச் சென்ற சிலர் கண்டதாகப் பேச்சு அடிபட்டது தெரிந்ததே.

அதன் பின்னர் கிருஷாந்தி மர்மமான முறையில் காணாமல் போயிருந்தார்.

இதனையடுத்து தமது மகள் காணாமல் போனதாகக் கூறப்பட்ட பகுதிக்கு அடுத்தநாள் தாயார் திருமதி இராசம்மா குமாரசாமி தமது மகன் பிரணவன் (கிருஷாந்தியின் தம்பியார்) மற்றும் அயலவரான தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்க காரியாலய உதவியாளர் சி. கிருபாமூர்த்தி ஆகியோருடன் சென்று அங்குள்ள படையினரிடம் அவர் தமது மகளைப் பற்றி விசாரித்ததாகவும், அவர்களுடன் சச்சரவு பட்டதாகவும் மக்கள் மத்தியில் பேசப்பட்டது. இதன் பின்னர் கிருஷாந்தியைப் போல அவரைத் தேடிச் சென்ற தாயார், தம்பியார், அயல் வீட்டுக்காரர் ஆகிய மூவரும் மர்மமான முறையில் காணாமல் போயினர்.

இச் சம்பவம் குடாநாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதோடு, காணாமற் போன நான்கு பேர் குறித்து நாடாளுமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்படும் அளவுக்கு பல மட்டங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. பல்வேறு செய்தி நிறுவனங்களிலும் இச் சம்பவம் குறித்து முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டன. பொதுவாக அரசுப் படைகளுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது.

யாழ். குடாநாட்டின் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்த இத்தகைய மர்மச் சம்பவங்கள் குறித்து படையினர் பாரபட்சமின்றி விசாரணை நடத்துவர் என்றும் —

படையினர் குற்றமிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

இச் சம்பவம் குறித்து இராணுவப் பொலீஸாரும், பொலீஸாரும் தனித்தனியாக விசாரணை நடத்தியதாக அறியவந்தது. அதனை அடுத்து சில இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களே மேற்படி நான்கு பேரையும் புதைத்த இடங்களை நேற்று அடையாளம் காட்டினர்.

(உ-3)

## சுமக்க முடியாத பொதியா?

யாழ்ப்பாண மாவட்டத்தின் ''முக்கிய பிரச்சினைகளில்'' ஒன்றாக மாறியிருப்பது ஓய்வூதியர்களுக்கு உரிய வேளையில் அவர்களுக்குரிய ஓய்வூதியம் கிடைக்காமை!

ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் கைக்குக் கிடைக்கும் ஓய்வூதியமே அவர்தம் சீவனோபாயம். அதனை நம்பி அவர்கள் கடைகளில் வாடிக்கைக்குப் பொருள்களைக் கடனுக்கு வாங்குகிறார்கள். அந்தக் கடனை உரிய தவணையில் செலுத்தாவிடில் வீட்டில் அடுப்பு எரிவது கஷ்டமாகிவிடுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓய்வூதியர்களில் கணிசமான எண்ணிக்கையினர் உரிய வயது வருவதற்கு முன்னர் சேவையில் இருந்து இளைப்பாறியவர்கள். வடக்கு — கிழக்குக்கு வெளியே சேவையாற்றுவது பல வகைகளிலும் பாதுகாப்பற்றது' சோதனையும் வேதனையும் நிறைந்தது என்று கருதி இவர்களில் பலர் இளவயது ஓய்வூதியர்களாக மாறினார்கள்.

வடக்கு—கிழக்கில் நிலவிய, போர் விளைத்த, சீரின்மைகள் மற்றும் வசதிக் குறைவுகளாலும் பலர் இளவயது ஓய்வூதியரானார்கள்.

இவர்கள் தமது பிள்ளைகளின் பள்ளிச்செலவு உட்பட மாதாந்தச் செலவுகளுக்கு ஓய்வூதியத்தையே நம்பி இருப்பவர்கள். உரிய வேளையில் அந்தக் கொடுப்பனவு கிடைக்காவிடில் அவர்களின் குடும்பங்கள் படும் கஷ்டங்கள் எண்ணிலடங்கா.

ஓய்வூதியத்தை வழங்குவதில் சம்பந்தப்பட்ட பகுதியினர் பல தடங்கல்கள், தாமதங்களைச் சந்திக்க நேரிடும். அவற்றுக்கான பல புறநிலைக் காரணிகளும் இருக்கும். அதாவது அவர்களிடமும் தாமதத்துக்கான காரணங்கள் இருக்கும்.

ஆனால் ஓய்வூதியம் வழங்குவதில் அடிக்கடி தாமதம் ஏற்படுவது என்பது, அது தொடர் கதையாக நீளுவது என்பது, ஓய்வூதியர்களைப் பல கஷ்டங்களுக்கு ஆளாக்குவது மட்டுமன்றி, அவர்களின் மன நிலையைக் கூட பாதிப்படையச் செய்வதாகும். எனவே இது விடயத்தில் விசேட அக்கறை செலுத்தி தாமதத்தைத் தவிர்க்கும் வழிமுறைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்படுவது அவசியம்.

ஓய்வூதியக் கொடுப்பனவு அலுவல்கள் பரவலாக்கப்படுவதால் தாமதம் இருக்காது என்று பொதுவாக நம்பப்பட்டது. ஆனால் நான்கு புதிய பிரதேச செயலகப் பகுதிகளைச் சேர்ந்த 6,000 ஓய்வூதியர்களுக்கும் இம்மாத ஓய்வூதியம் கிடைத்து விட்டது. ஏனைய பகுதிகளைச் சேர்ந்த 6,000 பேருக்குக் கிடைக்கவில்லை என்பது ஆரோக்கியமான விவகாரம் அல்ல. எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

எங்கோ ஓர் இடத்தில் தவறு, அசமந்தம் நடந்து கொண்டிருப்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

குடாநாடு முழுவதிலும் ஓய்வூதியம் வழங்குவதைபரவலாக்கி அந்தப் பொறுப்பை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிடம் ஒப்படைத்தால் இந்தப் பிரச்சினை தீரக் கூடும்.

இது குறித்துக் கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி, ஓய்வூதியத் தாமதத்தைத் தவிர்க்க யாழ். செயலக அதிகாரிகள் ஊக்கத்துடன் செயற்பட வேண்டும். சுமக்க முடியாத பொதிகளைத் தலையில் ஏற்றிக் குறை கேட்பதால யாருக்கு என்ன இலாபம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட்டரங்கு**

# இந்தியா - தென் ஆபிரிக்க அணிகள் இன்று மோதும்

ஜெயப்பூர், ஒக். 23

இந்தியா, ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் பங்கு பற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று ஜெயப்பூரில் நடைபெறும் போட்டியில் இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டம் காலை 8.50 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டித் தொடரில் தென் ஆபிரிக்கா 4 புள்ளிகளையும் இந்தியா 2 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

ஆஸ்திரேலியா தான் விளையாடிய 2 போட்டிகளிலும் தோல்வியுற்றதால் அவ்வணிக்கு புள்ளிகள் ஏதும் கிடைக்கவில்லை. (இ-10)

## நல்லூர் கோட்ட ஆங்கில தின போட்டிகள்

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப்போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் [வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும்] யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். [உ]


பருத்தித்துறை, தம்பசிட்டி

அருள்மிகு பண்டாரி அம்மன்

என வழங்கும்

**மகாமாரி அம்மன் தேவஸ்தானம்**

மேற்படி தேவஸ்தானத்தில் கடந்த நவராத்திரி தினத்தில் காலை 8 மணி தொடக்கம் 9.30 மணி வரை இலட்சார்ச்சனையும் ஹோமமும், பி. ப. 4 மணி தொடக்கம் 5மணிவரை ஸ்ரீசக்கரயந்திரபூசையும்

பிரம்மஸ்ரீ தா. வாசுதேவக்குருக்கள்

தலைமையில் மற்றும் ஏனைய குருமார்களும் ஒன்றிணைந்து வெகு சிறப்பாக நடத்தப்பெற்றன.

இம்முறை முதல் முறையாக கேதாரகௌரி விரதம் 21 நாள்களிலும் அபிஷேகம், பூசைகள் ஆகியான சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பெட்டிக்காப்பு— ரூ. 300/-

தனிக்காப்பு— ரூ. 50/-

சிவஸ்ரீசபாரத்தின தேசிகர்

தர்மகர்த்தாவும் ஆலய பிரதமகுருவும்

(43300)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி செல்லம்மா இராசா

எமது கல்லூரி ஆசிரியை செல்வி. சிவனேஸ்வரி இராசா அவர்களின் தாயார் புன்னாலைக் கட்டுவன் திருமதி செல்லம்மா இராசா அவர்கள் 20-10-96 இல் காலமானது குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர்,
ஆசிரிய கழகம்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

(சி/3334)

## கண்ணீர் அஞ்சலி

### திரு. செபமாலை ஞானப்பிரகாசம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி M.G. ஜெயரட்ணம் அவர்களின் தந்தையார் இணுவில் திரு. செபமாலை ஞானப்பிரகாசம் அவர்கள் 12-10-96 இல் காலமானது குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர்,
ஆசிரிய கழகம்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

(சி/3333)

## பேச்சுவார்த்தை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ இலங்கையில் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வர சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

★ அரசியல் தீர்வு காணும் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் சேர்க்கப்பட வேண்டும்.

★ பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல ஒழுங்கமைப்பாளர் ஒருவரின் சேவை இந்தக் கட்டத்தில் உதவியாக இருக்கலாம்.

★ அனைத்து அரசியல் கட்சிகளின் தீவிர பங்களிப்புடன் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முயற்சி தொடரப்பட வேண்டும். (இ-3)

## புதை குழியில்...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

உடைகள், அவர்களது செருப்புகள் ஆகியவை மூலம் அவர்கள் அடையாளம் காணப்பட்டனர். காணாமற் போன கிருஷாந்தி குடும்பத்தவரின் சடலங்களை அவர்களது உறவினர்களும், கிருபாமூர்த்தியின் சடலத்தை அவரது மனைவியும் அடையாளம் காட்டியதாகத் தெரியவந்தது.

சடலங்கள் புதைக்கப்பட்ட பகுதி மழை காலத்தில் வெள்ளம் நிற்கும் பிரதேசம் என்பதால், புதைகுழிகளை வெட்டத் தொடங்கியபோது குழிகளில் வெள்ள நீர் ஊறத் தொடங்கியதாகவும்—

அதற்கு இடையில் சடலங்களின் எஞ்சிய பகுதிகளை மேலும் சேதமுறாதுகுழிகளை வெட்டி, குழிகளிலிருந்து எடுப்பதற்கு ஆஸ்பத்திரி ஊழியர்கள் மூவரும் பெரும் கஷ்டப்பட்டதாகவும் தெரிய வந்தது.

மீட்கப்பட்ட சடலங்கள் நான்கும் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான தமது விசாரணைகளை யாழ். மாவட்ட நீதிபதி என். அருள்சாகரன் இன்று யாழ் நீதிமன்றத்தில் நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சில இராணுவத்தினர் அப்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது விடயம் தொடர்பாக மேலும் சில படையினர் கைது செய்யப்பட இருப்பதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (இ-3)

## பொலனறுவையில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் —

தாக்குதலின் பின்னர் அவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல முன் காவல் நிலையத்துக்குத் தீ வைத்தனர் என்றும்— பி. பி ஸி. தெரிவித்தது. (இ-3)


## ஸ்ருடியோ பளை

உங்களிடமுள்ள கலர்படச்சுருள்களை தரமான முறையில் கொழும்பில் கழுவி மூன்று (3) தினங்களில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய நிறுவனம் ஸ்ருடியோ பளை.

பிரதி ஒன்று ரூ 10/- மட்டும்.

கண்டி வீதி,
பளை.

(43310)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இராசம்மா குமாரசாமி

எமது பாடசாலை உப அதிபராகக் கடமையாற்றிய திருமதி இராசம்மா குமாரசாமி அவர்களதும், அவரது மகன் கிருஷாந்தி, மகன் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரின் அகால மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

அன்னார்களது ஆத்மாக்கள் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம், கைதடி.

23 - 10 - 96 (43314)

## கண்ணீர் அஞ்சலி

### சி. கிருபாமூர்த்தி

(காரியாலய உதவியாளர், தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி)

எமது சங்க ஊழியர் சி. கிருபாமூர்த்தி அவர்களுக்கும் அவருடன் காலமாகிய ஏனையோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியினைச் செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தென் மே. ப. நோ. கூ. சங்கம்
பணிப்பாளர், பணியாளர்கள்.

(சி/3331)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லாச்சி சீனிவாசகம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லாச்சி சீனிவாசகம் 21 - 10 - 1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சீனிவாசகத்தின் அன்பு மனைவியும், அன்னப்பிள்ளை, சின்னம்மா, நவரத்தினம், தருமராசா, பத்மநாதன், செல்வராஜா, சோதிமலர், இராசமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, மாணிக்கம், சின்னையா மற்றும் முத்தையா, வைரமுத்து, சின்னம்மா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் சிவஞானம், நல்லையா, ஞானப்பிரகாசம், இராசமணி, யமுனா, கமலா, புஸ்பம் ஆகியோரின் மாமியாரும் ஆவர்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22-10-96) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உரும்பிராய் வடக்கு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பெ. ஞானப்பிரகாசம்
(மருமகன்)

தற்போதைய முகவரி:
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (43312




தரமான புளொக்குகளைத் தயாரிக்க
யாழ். நகரில் ஒரே நிறுவனம்

**அருண் புளொக் தயாரிப்பாளர்கள்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2. இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23 - 10 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org